1972 ஆகஸ்ட் 22]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படி ஏதாவது குறைபாடு இருக்குமானால் இந்தக் கேள்விகள் எழுந்ததன் மூலம் வானொலி நிலையத்தார் திருத்திக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். அப்படி அதிகக் குறைபாடு இருப்பதாக எனது கவனத்திற்கு ஏதும் வரவில்லை.

திரு. த. சோணையா : தமிழக முதல்வர் இந்த நாட்டுக்கேற்ற நல்ல சட்ட திட்டங்களை உருவாக்கி அதன் மூலம் பயனடைகிற மக்கள் வானொலியின் மூலமாகப் பேச்சைக் கேட்பது மட்டுமல்லாமல் அவர்களை நேரடியாகப் பார்க்கும் அளவுக்கு டெலிவிஷன் அமைத்து, அதற்கு ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : விரைவில் டெலிவிஷன் நிலையமொன்று நிறுவுவதற்கு அடிக்கல் நாட்டு விழா சென்னையில் நடைபெற இருக்கிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.

*239 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழகத்தில் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் எத்தனை பேர் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மூவர்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலுள்ளவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் மாவட்ட ஆட்சித் தலைவரின் விகிதாச்சாரம் அடங்கியுள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்களை நியமிப்பதில் அது போன்ற விகிதாச்சாரம் எதுவும் கிடையாது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, முன்பெல்லாம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் பதவிதான் கொடுத்து வந்தார்கள். இந்த அரசாங்கம் வந்த பிறகுதான் மூன்றாக ஆக்கினார்கள் என்பது உண்மையா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : எத்தனை பேர் இருக்கவேண்டுமென்ற நிர்ணயம் இல்லை. அவ்வப்போது தேவைப்படுகிற நேரத்தில் யார் யார் எந்தெந்த மாவட்டத்தில் பணியாற்ற வேண்டுமென்பதை அரசு நிர்ணயிக்கும்.